பதிவெண்: எம். 7030.

குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 7-10-58 செவ்வாய் | இசை: 19

தொடக்கப்பிள்ளைக்குத் தொடக்கக் கல்வி!

அப்பா என்றுசொல் – எங்கே?
அப்பா என்றுசொல்

அப்பா அப்பா, அப்பா

அப்பா என்றுசொல் – எங்கே
அப்பா என்றுசொல்.

திப்பி வடித்த தேனைப் போலச்
சிப்பி உடைத்த முத்தைப் போல
அப்பா என்றுசொல் – எங்கே
அப்பா என்றுசொல்.

முப்பெரு வேந்தர் வழிவந்தவனே,
முத்தமி ழேஉயி ராய்வந் தவனே
அப்பாவும் நானும் செய்தவ நிலத்தில்
அன்பு விளைக்க விளைந்தாய் மகனே
அப்பா என்றுசொல் – எங்கே
அப்பா என்றுசொல்.

குறள் படித்தால் அறம்பு கட்டும் – என்
கொம்புத்தே னேஅது நாளைக்கா கட்டும்
நிறை*மூன் றெழுத்தே இன்பம் கொட்டும்
நேரே உன்வாய் இன்றுதிறக் கட்டும்
அப்பா என்றுசொல் – எங்கே
அப்பா என்றுசொல்.

"அம்மா" என்ருய் பாதி தானே?
அப்பா என்பது மீதித் தேனே
செம்மை யாய்ச்சொல் அதனைத் தானே
செவிநான் பெற்ற பேறென் பேனே
அப்பா என்றுசொல் – எங்கே
அப்பா என்றுசொல்.

* மூன்றெழுத்து: 'அப்பா'

இசை அமைப்பு

இசை – தேஷ் தாளம் – ஆதி

நீ சா ரிநி நீ ; ; நிச | ரீகம கரிசா; ரி|;பமரீ; ||
அப் பா என்று சொல் .எங்கே அப்பா . . . என்று.சொல்.

சா பா ; ; ,பமப தா;| ; ; ;பாதப | மகரீ ; ; ||
அப் பா . . . அப் பா. . . . அப் பா....(அப்பா)

;, க மா ப நி நீ ; நீ நீ | ;,ச்ா ச்ச்ா | ச்நி நீ நீச்ா ||
..திப் பி வ – டி. .த்த ..தேனைப் போ.. லே

;,பா நி ச்ா ரீ ; ரீ ;|;, சாரிச்நி தப த நி பா ; ; ||
.. சி ப்பி உ டைத்த ..முத்தைப்.போ . . லே . .
(அப்பா)

குறிப்பு:-

.ரீ – இது மேல் சுரம். நி – இது கீழ் சுரம்.
ரீகம – இவை துரிதம். I – இது தாள அங்கம்.
II – இது தாள முடிவு.

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ புரட்டாசி ௨௩

அண்ணாமலைப் பல்கலைக் கழகமா? ஆரியர் அடிவருடும் கழகமா?

கம்பராமாயணத்துப் பாலகாண்ட முதற் பகுதியை அண்-பல்-கழகம் வெளியிட்டுள்ளது இப்போது. இதற்குமுன் சுந்தர காண்டத்தையும் பகுதி பகுதியாக வெளியிட்டது, நினைவிருக்கும்!

அண்-பல்-கழகமானது தமிழின்மேல் அன்பு காரணமாகத்தமிழ் வளர்ச்சியில் உள்ள அக்கரை காரணமாக- கம்பராமாயணத்தை வெளியிட முன்வந்தது என்று யாரும் நினைப்பதற்கில்லை. தமிழைப் படுகொலை செய்ய வேண்டும். தமிழ்க் கலை, தமிழ் ஒழுக்கம் மறைக்கப்படவேண்டும். ஆரிய முடிச்சிமாறித்தனமே பெரிதுபடுத்தப்படவேண்டும் என்றதொரு கட்சியை முன்னின்று நடத்திவரும் நேருவின்காலில் நெடுஞ்சாண்கடையா கவிழுவதன் வாயிலாகஅண்-பல்-கழகம் வாணிகத்தைப் பெருக்க வேண்டும் என்பதுதான் இந்த வெளியீட்டின் நோக்கமும் என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

பெற்ற தமிழ்த் தாய்க்கும், பிறந்த பொன்னாட்டிற்கும் உற்ற தொண்டு செய்ய உயர்வழி இருக்கக் குற்ற மரபினர் செல்லும் கொடு வழியில் கால் வைத்ததானது அண்-பல்-கழகத்துக்கு அழகாகாது!

கம்பன் எப்படிப்பட்டவன்?

இந்நாளில் ஆரியத்துக்கு ஆட்பட்டுக் காரியத்தைச் செப்பனிட்டுக்கொள்ள எண்ணும் அண்-பல்-கழகத்தைப் போல, தமிழரைக் காட்டிக் கொடுத்தேனும் தம் வயிற்றை வளர்த்தால் போதுமென்று எண்ணும் கருமுத்துத் தியாகராசன் போல, குடிமை பிழைத்தும் அடிமை வியக்கும் தெ. பொ. மீனாட்சி அழகு. சேது ஆகிய இருபிள்ளைகளும்போல், நூலடி பிழைக்கினும் பார்ப்பான் காலடி அறிந்தால் போதுமென்னும் நாமக்கல் இராமலிங்கம்போல, தமிழ்நெறி கசக்கும் ஆரிய நெறியே அமிழ்தம் என்று எண்ணும் அண்ணாத்துரைபோல, வயிறு வளர்க்கக் கயிறு திரிக்கும் மா. போ. சி. போல. கம்பனும் அந்நாளில் தமிழரைக்காட்டிக் கொடுத்துப் பெருமையடைய எண்ணியவனே என்று அறியவேண்டும்.

அந்நாள், நாட்டுப் பெருவேந்தன் அவையின் பாட்டுப் பெருவேந்தனாய்த் திகழ்ந்திருந்த ஒட்டக்கூத்தனை எட்டத்தள்ள எதையும் செய்வது என்பதுதான் கம்பனின் திட்டம்.

அதனால்தான் கம்பன், அந்நாள் தமிழ்ச் சிவநெறியினர் எதிர்ப்பையும், தமிழர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் காஞ்சிப் பூணூற் கலப்படங்களைக் கூட்டிக் கொண்டு தமிழர் இயல்பை மறைக்க ஆரியக் கோணிப்பைதைத்தான் அதாவது வான்மீகியின் ஆரிய இராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தான். தான் செய்யும் அது தகுதியற்றது என்று தெரிந்திருந்தும் அதைச்செய்தான். அதனால்தான் அவன் தமிழ் இராமாயண நூல் தொடங்கும் போதே

ஆரியன் நாடோடியாகத் திரிபவன்

தர்மாநந்தகோசம்பி

வையம் என்னை இகழவும்
மாசு எனக்கு எய்தவும்

இந்த இராமன் கதையை மொழி பெயர்க்கின்றேன் என்றான். மிகநாணயம் உடையவன் போல இவ்வாறு முன் மொழிந்து கொண்டான் எனினும். அவன், தன்போல் இனத்தைக் காட்டிக் கொடுத்த தமிழர்கள் தமிழ் நாட்டில் உளரோ என்று தேடிப்பார்த்தான் நான் மட்டுமா அதோ பலர் இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள் என்று காட்டுவதுதான் கம்பன் ஆசை. ஆனால் அவ்வாறு ஒருவரையும் காட்டமுடியவில்லை. எனினும் தான் மொழி பெயர்க்கும் இராமாயணக்கட்டுக் கதையில் கிடைத்தான் கோடரிக் காம்பாகிய அநுமான்.

தூக்குகின்றான் தூக்குகின்றான் கம்பன் அநுமானைத் தன் இராமாயணத்தில். இராமாயணச் சுவடியைச் செட்டி நாட்டு விலங்கு (யானை) தூக்குவதுபோல.

ஏன் தூக்குகின்றான் அநுமானை ?

அப்படிப்பட்ட அனுமானே ஆரியனாகிய இராமனுக்காகப் போய்த் தமிழனாகிய இராவணன் நாட்டில் தீ வைத்தான். நான் ஆரியத்துக்காகத் தமிழியல்பில் தீ வைத்தது ஒரு குற்றமா என்று காட்டுவதற்காக!

அந்தச் செய்யுள் வருமாறு:

அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று றாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டுஅயலார்ஊரில்
அஞ்சிலே ஒன்றைவைத்தான் அவன்நம்மை அளித்துக் [காப்பான்

என்பது.

இந்தச் செய்யுளில்,

அநுமான். ஆரியற்காக ஏகி. ஐந்து பருப்பொருள்களில் ஒன்றாகிய நிலம் ஈன்ற சீதையைக் கண்டு. ஐந்து பருப்பொருள்களில் ஒன்றாகிய தியை அயலார் ஊரில் வைத்தான் என்று கம்பன் கூறுவதை நினைவில் கொள்க.

அந்தக்காலத்தில் கம்பனின் தன்னலத்துக்கு இவ்வாறு செய்யுள் செய்தான் எனினும், அதனால் இந்தக்காலத்தில், தமிழர் போராட்டத்திற்கு எடுத்துக் காட்டான பல உண்மைக் கருத்துக்கள் கிடைக்கின்றன.

1. தமிழர் வேறு ஆரியர் வேறு.

2. தமிழர் பண்பாடுவேறு ஆரியர் பண்பாடு வேறு.

3. இராமன் ஆரியன். இராவணன் தமிழன் என்கின்றார்கள் தமிழர் தலைவரும் தமிழறிஞர்களும்! ஆனால்,

இவைகளை எல்லாம் இப்போது, ஆரியரும் ஆரிய அடிவருடிகளும் மறுக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளார்கள். ஒரு பல்கலைக்கழகம், அதிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமானது அந்தத் திருட்டுப் பசங்களுக்குத் தேங்காய்ப் பாலும் சோறு போட்டால் அதைக் குருட்டுத் தனம் என்பதா? முரட்டுத் தனம் என்பதா? புரட்டுத் தனம் என்பதா?

இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள பாலகாண்டத்தின் ஷை செய்யுளில்

"ஆரியற்காக ஏகி"

என்பதை ஆருயிர்க்காக ஏகி என்று மாற்றி வெளியிட்டிருக்கிறது.

இப்படித்தான் கம்பன் பாடியிருப்பானும் இவ்வாறு வெளியீட்டுக் குழுவிலுள்ள ஏதுங் கெட்டவர்கள் கூறுகின்றார்கள். ஆருயிர்க்காக ஏகி என்று கம்பன் பாடியிருப்பானா? பாடினான் என்றால் சீதைக்காக ஏகிச் சீதையைக் கண்டு என்று பாட்டை அமைத்தான் என்றாகும்.

பாட்டுச் சுவை யுணர்ந்தானின் வீட்டு நாய் கூட இவ்வாறு குலைக்காது.

இன்று இதனுடன் நிறுத்தி மற்றொரு முறை எழுதப்படும்.

நூலும் சிகையும் நுவலிற் பிரமமோ? திருமந்திரம்

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

தாசர்

தாஸ என்று வடமொழியில் சொல்லப் படினும் இது வடமொழியன்று. தாஹி என்று பார்சி மொழியில் வழங்குவதால் இது பார்ஸி மொழியாகி விடாது.

தாதர் என்ற தூயதமிழ்ச்சொல்லையே ஏறத் தாழ 5000 ஆண்டுகளுக்குமுன் — அதாவது ஆரியர் நாவலந்தீவில் நுழையுமுன் – வடவ ராலும், பார்சிக்காரராலும் தாஸ, தாஹி என எடுத்தாளப்பட்டது என அறிதல் வேண்டும்.

தாத்தல் - கொடுத்தல், இது தாத்து என்று இன்றும் வழங்குகின்றது. அன்றியும் தாதம் என்றும் கொடுத்தல் என்ற பொருளில் வழங்கு கின்றது. இதன் முதனிலை தா என்பது காண்க. தா-கொடு. தாத்தல், தாத்து, தாதம் கொடுத்தல், கொடை என்க.

எனில், தாசர் என்ற சொல்லுக்குக் கொடையாளிகள் வள்ளல்கள் என்றுபொருளா என்று கேட்பாரை நாம் வேறென்னதான் என்று கேட்கின்றோம்.

தாசர் என்றால் அடிமைகள் என்பதல்லவா பொருள் எனில் அது பின்னுளில், என்றும் எடுத்துக்காட்ட நம்மால் முடியும். ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டவர்கள், தமிழ்ச்சொல் ஒவ்வொன்றையுமே தலைகீழாக்கி வைத்தார்கள். அவர்களின் ஏமாற்று, விழிப் புற்ற - ஆராய்ச்சிமிக்க இக்காலத்திலும் செல்லுமோ !

ஆரியர் - மிலேச்சர் என்பது பிங்கலந்தை. அதை அநாரியர் – மிலேச்சர் என்று இதே நூற்றுண்டில் உ. வே. சாமிநாதஐயர் முயற்சி யால் அகர வரிசை நூல் ஒன்றும் வெளி வந்திருப்பதை நாம் கண்டோம் அல்லோமோ? இருபது ஆண்டுகளின் நிலையே இப்படியானல், ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் முன்னிருந்த நிலை எவ்வாறு தலைகீழாக்கப்பட்டிருக்கும்!

பாலி மொழி ஆராய்ச்சியில் உலகப் புகழ் வாய்ந்த தருமானந்த கோசம்பி தம் "பகவான் புத்தர்" என்ற நூலில் அடியில் வருமாறு கூறு கின்றார்:-

ஆரியர் வருமுன்பு சிந்து பஞ்சாப் பெருமா வட்டங்களில் தாசர்களின் ஆட்சி நிலவி யிருந்தது. இப்போதுதான் தாசன் என்ற சொல்லுக்கு அடிமை என்று பொருள் ஆக்கி வைத்திருக்கிறார்கள். ஆனல், ஆரிய மறையில், தாஸ தாச்என்ற இரண்டுவினைப் பகுதிகளுக்குக் கொடுத்தல் என்ற பொருளே அமைந்திருக்கின் றது. அண்மையில் வெளிவந்த அகரவரிசை நூல் களிலும் கொடுத்தல் என்ற பொருளிலேயே தாஸ, தாச் என்ற சொற்கள் அமைந்துள்ளன. எனவே தாசன் என்ற சொல்லுக்கு முதலில் உண்டான பொருள்கள் கொடை வள்ளல் நாவ லந்தீவின் உயர்குடித் தோன்றல்! என்பனவே யாகும். ஆவெஸ்தாவில் பர்வதின்யஸ்து என்ற வட்டாரத்தில் தாசநாட்டுப் பிரிரர்கள் வழிபாடு ப்றறிய செய்தி வருகின்றது. அதில் அவர்களை "தாஹி" என்று குறித்துள்ளார்கள்:-

தாஸ, தாச் என்றதமிழ்ச் சொற்களை ஆரிய மறை எடுத்தாண்டதும் இங்கு நோக்கத் தக்கது.

தாசன், – தமிழ்ச்சொல்லே என அறுதி யிட்டுக் கூறுக.

கு

பிச்சைபுகும் பார்ப்பார் அகத்தைஎட்டிப் பாரோமே ஔவையார்

குழந்தைக்கு அழைப்பு!

தாய் தந்தை போட்டி

தோழியிடம் இருக்கும் குழந்தையை நோக்கித் தாய் தன் கையேந்தியபடி:

தாய்: என்னிடம் வா சின்னப்பா!
தந்தை: என்னிடம் வா பொன்னப்பா!

தாய்: பால் கொடுப்பாள் அன்னை
படுத்த ணைப்பாள் அன்னை
தாலாட் டுவாள் அன்னை - நீ
தாவிடுவாய் என்னை
என்னிடம் வா சின்னப்பா.

(கருநாடக தேவகாந்தாரி)

தந்தை: அம்மா ஒரு வம்பி
அவளையே நீ நம்பிச்
செம்மை யாய்வி ரும்பி - நீ
செல்ல வேண்டாம் தம்பி.
என்னிடம் வா பொன்னப்பா.

(வலச்சி)

தாய்: அப்பா தாம்அ டிப்பார்
அம்மாதான்அ ணைப்பாள்
இப்போதென்மேல் தப்பா – உனக்
கென்மேலேவெ றுப்பா?
என்னிடம் வா சின்னப்பா.

(காப்பி)

தந்தை: ஆசையுன்மேல் இல்லை
அவள் கடிப்பாள்பல்லை – அவள்
ஏசுகின்ற சொல்லை - நீ
ஏற்காவிட்டால் தொல்லை
என்னிடம் வா சின்னப்பா.

(சிந்துபைரவி)

தாய்: காதலோளன் மீது
கடுகடுப்புன் மீது - உனக்
கேதுதுணை ஓது - தம்பி
யானுனக்கே தோது
என்னிடம் வா சின்னப்பா.

(பியாக்)

தந்தை: உன்தாயைமறந்தேன் – அவள்
உதவியும்துறந்தேன் - நீ
இன்பமென்றறிந்தேன் – உனை
ஏந்தநான்பறந்தேன்
என்னிடம் வா சின்னப்பா.

(கமாஸ்)

தாய்: பிள்ளைக்கான வாய்ப்பே – தன்
பெற்றதாயின் காப்பே - இங்
குள்ளவரின் ஏய்ப்போ. உயிர்
உறுக்கும்வேலந் தோப்பே.
என்னிடம் வா சின்னப்பா

(சுருட்டி)

தந்தை: அன்னைகெட்டிக் காரி - அவள்
அதிகப்பேச்சுக் காரி
என்னையேநீ கோரி - வா!
எடுத்தணைப்பேன் வாரி
என்னிடம் வா பொன்னப்பா.

இசை அமைப்பு

இராக மாலிகை

இராகம் : ஆனந்த பைரவி. *தாளம் :* திச்ரசாதி ஏகம்.

எடுத்தல் :– ச் க ரி க ம ப த ப ச்
படுத்தல் :– ச் நி த ப ம க ரி ச } *20–வது மேளம் பிறப்பு.*

தாய்:–

ச கா ரி கா | ம ா பா பா ||
எ ன்னி டம் வா சி ன் னப் பா
ச க ா ரி கா | பழ கரி சா ||
எ ன் னி டா வா பொன் னப் பா

தந்தை :–

சா சா சா | பா பா பா ||
பா ல் கொடுப் பாள் அ ன் னை!
ம பா நி தா | ச்ா ச்ா ச்ா ||
ப டுத் தணைப் பாள் அன்னை
ॱரீ ச் ா ச் ா | ॱரி ச் நி த ப ா ||
தா ல ா ட் டு வாள் அன்னை
பத நீ பா | மாபம கரி சநி, ||
தா வி டு வாய் எ ன் னை

[மற்ற அடிகளையும் குறித்த இசைகளில் பாடிக்கொள்க.]

இசை அமைப்பாளர் ;—
எழிலிசைப் புலவர், திரு டீ. ஆர். பெருமாள், சிதம்பரம்.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

இடம் : பாண்டி நகர வாயில்.

நேரம் : காலை.

உறுப்பினர் : சோழநாட்டுத் தூயன், ஊரார்.

காட்சித் தலைப்பு :

அவள் மறந்தாள் நான் மறக்கவில்லை.

நிலைமை : *சோழநாட்டுத் தூயன் வலக்கையில் சட்டியும், இடது கையில் நரம்பறுந்த யாழும் ஆகப் பாண்டி நாட்டின் நகரவாயிலில் நுழைகின்றான். வெற்றிலையும் பூவும்ஏந்திய வாழ்வரசி ஒருத்தியும் அவளின் மணவாளனும் எதிர்ப்படுகின்றார்கள். தூயன் முகம் மலர்கின்றது.*

தூயன்: மங்கலக்காட்சி! வாழ்வரசி மலர் கொண்டு வருகின்றாள்! அவள் மணாளன் மலர்ந்த முகம்கொண்டு வருகின்றான்,

(*மேற் செல்லுகின்றான்*)

நகருள் ஒரு தெரு,

குதிரைமேல் வரும் ஓர் ஆடவனின் மேலணிந்திருந்த பொன்னுடை, கீழ் விழுந்து விட்டதால் குதிரையை நிறுத்தி இறங்கி அதை எடுக்கின்றான். அதே நேரம் எதிரில் வரும் தூயனை அவன் கண்டு வியப்பில் ஆழ்ந்துவிடுகின்றான். வியப்பில் ஆழ்ந்த அவன் விழிகள் மீண்டு இரக்கத்தில் குதிக்கின்றன. தூயன் அருகில் நெருங்க நெருங்க இரக்க விழிகள் அச்சத்தில் குதிக்கின்றன. குதிரை மருளுகின்றது.

தூயன்: உங்களை அடிக்கடி நான் காணுவதுண்டு. இந்த ஊர்தானே?

குதிரைக்குடையவன், அச்சத்தால் ஒதுங்கிக் குதிரைமேல் ஏறக் குதிரை பறக்கின்றது.

தூயன்: (*போகும் குதிரையை உற்று நோக்கி*) இவன் ஒரு வெறியன்! அதில் ஒன்றும் ஐயமில்லை.

(*போகிறான்*)

மற்றொரு தெருவில்,

தூயனை அருகிற் கண்ட ஒரு மக்கட் கூட்டம் மேலும் தூயனை உற்று நோக்கி விலகி நிற்கின்றது.

கூட்டத்தில் ஒருவன்: அவன் என்ன அடித்தா தின்று விடுவான். நில்லுங்கள்.

(*தூயனைச் சுற்றிப் பிறை வளைவாக நின்ற மக்கள்; ஏதும்பேசாமல் நிற்கிறார்கள். தூயன் வியப்புறுகின்றான்.*)

தூயன்: நீங்கள் எல்லாரும் இந்த ஊர் தானே?

ஒருவன்: இல்லை இல்லை வானத்திலிருந்து வருகின்றோம்!

தூயன்: கடுமொழிக்குக் காரணம்?

ஒருவன்: உம் மூளைக் கோளாறுதான்!

தூயன்: எதைக் கொண்டு அவ்வாறு கூறுகின்றீர்கள்?

ஒருவன்: அது உமக்கு விளங்கவில்லையா?

தூயன்: நீங்கள் சொல்வது என்னிடமில்லையே.

ஒருவன்: கண்ணாடி எடுத்துப் பாருமே நாங்கள் சொல்வது பொய்யென்று நினைத்தால்!

தூயன்: என் உடலுக்கு முப்பது ஆண்டு மதிப்பு—உள்ளது பதினாறு ஆண்டுதான். இளமையின் முறுக்கு! உங்களை வியப்படையச் செய்திருக்கலாம். உங்கள் வியப்பு என் மூளைக் கோளாறு?

தொடர் 10—ஆம் பக்கம்

நம்பிக்கை வைத்தான் பாட்டு!

நம்பிக்கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக்கை வைத்தான்.

கம்மாளன் திறமென் றாலும்
கற்பாவை அதுவென் றாலும்
அம்மையே உன்னை அல்லால்
அணுவும் அசையா தென்றே

நம்பிக்கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக்கை வைத்தான்

கைகூப்பி நிற்பான் — அவன்
கண்ணீர் உகுப்பான்
கொய்தோடி மலர்கள் — அவள்
கோயிலுக் களிப்பான்.

வையமெல் லாம் பார்க்க
வாயார அவனை வாழ்த்த
உய்விக்க வேண்டும் இன்றே
உன்னடியே துணை என்றே.

நம்பிக்கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக்கை வைத்தான்

நீஇ ருக்கை யிலே — என்
தாய் எதற் கென்பான் — உன்
கோயில் இருக்கையில் — என்
குடிசை ஏன் என்பான்

கோயிலிற் போய்ப் படுத்தான்
குடும்பத்தை யும் விடுத்தான்
ஆயபண் ணே படித்தான்
அன்னையே துணை என்றே

நம்பிக்கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக்கை வைத்தான்

இரவினில் எழுந்தான் — கோயில்
எங்கும் திரிந்தான்
கருவறை நுழைந்தான் — நகை
கண்டே விழைந்தான்

திருத்தாலி கழுத்தில் கண்டான்
திருமணி முடியும் கண்டான்
திருப்பதக் கம் புரளும்
திருமார்பின் ஒளியும் கண்டான்

நம்பிக் கைவைத்தான் — அவள்மேல்
நம்பிக் கைவைத்தான்

(தன்) வேட்டியை அவிழ்த்தான் — எதிர்
போட்டு விரித்தான்
பூட்டிய நகைகள் — கழற்றிப்
போட்டுக் குவித்தான்

காட்டுக் கேன்மலர் ஓடை?
கல்லுக்கேன் பொன் னுடை?
கேட்டுக்கொண் டேநொ டிக்குள்
கேளாத அவள் இடுப்பில்

நம்பிக் கைவத்தான் — அவள்மேல்
நம்பிக் கைவைத்தான்

நம்பிக்கை வைத்தார் — என்று
நம்பிக் கைவைத்தான்
தம்பி கைவைத்தான் எனினும்
தாய் கண்வைத்தாளா?

கம்பிநீட் டினான் அன்றோ
கைவைத்த இடம் ஒன்றோ
நம்பாதார் நம்பிக் கையில்
நம்பிக்கை வைத்தல் நன்றோ?

நம்பிக் கைவைத்தான் — அவள்மேல்
நம்பிக் கைவைத்தான்!

இசை அமைப்பு

இசை – பந்துவராளி தாளம் – ரூபகம்

கா ;, மாபா , பா | பதநித தாதம பாபா ||
நம் . . பிக்கை . வைத் தான் . . . . . அவள்மேல்
பதநீ ச்ாச்நி தாநீ | ச்ா ; த்நிச்ாரிச் நிதபம ||
நம் . . பிக்கை .வைத்தான் . . . .

(நம்பி)

பமபாதாநி ச்ச்ச்ா ; | ச்நிக்ரிச்நி தநிச்ாச்ா |
கம்மாளன் திறம் என்றாலும் கற்பா.வை அதுவென்றாலும்
ச்ரிக்ாம்ா க்ம்க்ர்ரீ | க்ரிச்நிதபபமகரிசரி ||
அம்மையேஉன்னையல்லால் அணுவும்அசையாதென்றே.

(நம்பி)

[மற்ற அடிகளும் இது போல் பாடுதல் வேண்டும்]

★ ★ ★

பிசிராந்தையார்

ஒருவன்: அப்படியானால்?

ஒருவன்: எங்களுக்கு மூளைக் கோளாறு போலிருக்கிறது. அப்படித் தானு!

ஒருவன்: விடுங்கள் அவரை, நமக்கென்ன?

ஒருவன்: அது சரி ஊர்க் காவலர் வேலை! நீர் போம் ஐயா! வழியோடுபோம். இளைஞர்கள் கல்லால் அடிக்கக்கூடும்.

ஒருவன்: ஏடா! வருகின்ருயா இல்லையா பைத்திய மருத்துவ விடுதிக்கு?

(என்று கை தாவத் தூயன் ஓடுகின்ருன்)

பச்சைக்கிளியின் வீட்டுத் தெருவில்,

(தேனப்பன் எதிரில் வருகின்ருன்)

தூயன்: என்ன மக்களின் நடமாட்டம்! ஏது மங்கலச் செய்தி?

தேனப்பன்: பச்சைக்கிளிக்குத் திருமணம் நடந்தது இல்லையா?

தூயன்: என் பச்சைக்கிளிக்கா? எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே தேனப்பா! மெய்தானு? விளையாடுகின்ருயா?

தேனப்பன்: இன்னெரு தரமா உனக்குப் பயித்தியம் பிடிக்க வேண்டும்.

தூயன்: இனி என் நிலை?

தேனப்பன்: சாவுதான்! '—அதோ பார் வீட்டின் அண்டையில் தோட்டம்! உற்றுப் பார் காதல் இருவர் பொன்னூசல் ஆட்டம்!

(தேனப்பன் போய் விடுகின்ருன்)

தோட்டத்தில் பாட்டு.

மாருத இளமை	வேண்டும்
வற்ருத அன்பு	வேண்டும்
பேறெல்லாம் நாம் பெற	வேண்டும்
வே றென்ன	வேண்டும்
பேறெலாம் நாம் பெற	வேண்டும்
மீருத நெஞ்சம்	வேண்டும்
வீழாத வாழ்வு	வேண்டும்
வீறெலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
வீறெலாம் நாம் பெற	வேண்டும்

வீறு — நிகரற்ற நிலை.

குன்ருத ஆசை	வேண்டும்
கொள்ளாத இன்பம்	வேண்டும்
நன்றெலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
நன்றெலாம் நாம் பெற	வேண்டும்
அன்ருடம் மகிழ	வேண்டும்
ஆரும் நமைப் புகழ	வேண்டும்
வென்றெலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
வென்றெலாம் நாம் பெற	வேண்டும்
ஏராளச் செல்வம்	வேண்டும்
எல்லார்க்கும் நல்க	வேண்டும்
சீரெலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
சீரெலாம் நாம் பெற	வேண்டும்
பாராளும் திறமும்	வேண்டும்
பட்டாளத் தமிழர்	வேண்டும்
நேர் எலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
நேரெலாம் நாம் பெற	வேண்டும்
தென்னுடு வாழ	வேண்டும்
செந்தமிழ் வாழ	வேண்டும்
பொன்னெலாம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
பொன்னெலாம் நாம் பெற	வேண்டும்
முன்னேறும் திறமை	வேண்டும்
மொய்ம்பேறும் தோள்கள்	வேண்டும்
தன்மானம் நாம் பெற	வேண்டும்
வேறென்ன	வேண்டும்
தன்மானம் நாம் பெற	வேண்டும்

(பொன்னூசல் ஆடுவார்க்குச் சற்றுத் தொலைவில் உள்ள ஓர் ஆலின் பின்னே நின்று - பச்சைக்கிளியைப் பார்த்த தூயவன் தன் இருகையாலும் தன் முகத்தை மூடியபடி ஆலடியில் குப்புற விழுகின்ருன்)

தூயன்: அவள் என்னை மறந்தாள் நான் அவளை மறக்கவில்லை நான் வாழும் நாட்டில் அவளில்லை. ஆனல் அவள் வாழும் நாட்டில்

அண்ணாத்துரையா எனக்குப் பொற்கிழி அளித்தார்?

விழா நாளைக்கு என்னும்போது நான் சென்னையில் தங்குவதற்கென்றமைத்த வீட்டில் வந்துதங்கிவிட்டேன். அன்றைக்கே சிங்கப்பூர், திருச்சி,சேலம் முதலிய இடங்களிலின்று பெரு மக்கள் சென்னையில்வந்துநிறைந்துவிட்டார்கள்.

என்னைச் சிலர் நேரில் வந்து கண்டார்கள். அவர்களால் நான்பெற்ற முறையீடுகள் குறிப் பிடத்தக்கவை:

அண்ணாத்துரை வந்து சொன்னது:

நான் விழாக் குழுவில் பொருட் காப்பாள ைக இருந்து வேலை செய்யாவிட்டால் இத்தனை சிறப்பாக இந்த விழா அமையாது.

என் செலவில் இந்தப் பொன்னாடையை நெய்யச் செய்தேன்.

அண்ணாத்துரை போனபின் மற்றொரு செல்வந்தர் வருகின்றார் அவர் சொன்னது:

என் செலவில் என் தறியில் என் ஆளைக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது, பொன்னாடை.

சேலத்தார் நால்வர் வருகின்றார்கள் அவர் கள் சொன்னது.

சேலத்துப் பகுதியில் விழாவுக்கென்று தொகை பெற்றுக்கொண்டவர் இரசீது தருவ தாய்ச்சொல்லியும் தரவேயில்லை.

சிங்கப்பூரார் ஒருவர் வருகின்றார் அவர் சொன்னது:

பன்முறை பத்தாயிரம் ரூபாய் அனுப்பி யிருக்கின்றோம் சிங்கப்பூரினின்று! தொகை பெற்றுக்கொண்டதற்கு இரசீது அனுப்புவதில் சுணக்கம் காட்டுகிறார்கள் குழுவினர்.

டி. என். இராமன் வருகின்றார். அவர் சொன்னது:

குயில் செய்யுள் வார இதழ் வெளியிடுவதற் கான முற்செலவுக்காக இரண்டாயிரம் ரூபாய் தனியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக மீதியைத்தான் உங்களுக்குப் பொற்கிழியாக அளிக்கப்படும்.

விழா நடந்தது. பொன்னாடை போர்த்தப் பட்டேன். பொற்கிழியை அண்ணாத்துரை கையால் அளிக்கப் பெற்றேன். அதை மிக விழிப்பாக அண்ணாத்துரை முயற்சியால் நிழற் படம் எடுக்கப்பெற்றேன்.

நான் இருக்கின்றேன் அந்த அளவு பேறு பெற்றேன். வீடுண்டு எனக்கு! வீட்டில் அவளில்லை; பயனில்லை-நாடுண்டு எனக்கு அந்நாட்டில் அவளில்லை-பயனில்லை. அப்பா உண்டு எனக்கு - அப்பாவுக்கு ஒரு மருமக ளில்லை பயனில்லை. அம்மாவுண்டு எனக்கு அம்மாவுக்கு இவள் மருமகளாக அங்கில்லை பயனில்லை.

மேலுக்கு ஏந்திய இந்த வெறுஞ்சட்டி என் வாழ்வுக்கே நிலைத்துவிட்டது

பகட்டுக்கு ஏந்திய இந்தப் பாசற்ற யாழும் என் பங்கில் குந்திக்கொண்டது.

பச்சை மாறிய பழுப்பிலை நான், அச்சு வளைந்த வண்டி நான். பிச்சையெடுத்துண்டு திரிவேன் இங்கே! ஏன்? அவள் இங்கிருப்பதால் தான்!

அவளை நாள்தோறும் பார்ப்பேன் போகும் என் உயிரை மீட்பேன்.

(தன் பார்வை அவள் பக்கம் சென்று விடாமல் கையால் மறைத்தபடி தள்ளாடிச் செல்கின்றான்.)

★

பொற்கிழி – பையில் ஐயாயிரம் குறையக் காணப்பெற்றேன். கணக்குப் பின்னால் தருவதாகக் கேட்கப்பெற்றேன். பலவிடங்களிலிருந்தும் இருபத்தையாயிரந்தான் சேர்ந்ததென்று கூறப்பெற்றேன். என் வீட்டுக்கு அனுப்பப்பெற்றேன்.

விழா நடந்தபின் – அடுத்தவாரத்தில் அண்ணாத்துரை வெளியிடும் திராவிடநாட்டில் ஒரு குறிப்புக் காணப்பட்டது. பாரதிதாசன் பொன்னாடை போர்த்து விழாக் குழுவினர், விழா வரவு செலவுக் கணக்கையெல்லாம் ஸ்ரீ பாரதிதாசன் அவர்களிடம் அனுப்பிவிட்டார்கள். இனிப் பாக்கித் தொகையை அனுப்ப வேண்டியவர்கள் நேரே பாரதிதாசன் அவர்கட்கே அனுப்பிவிடுக. என்ற கருத்தமைந்திருந்தது.

அவ்வாறு எனக்குக் கணக்கு அனுப்பப்பட்டதா? இன்று வரைக்கும் அனுப்பப்படவில்லை. அடுத்தடுத்து அப்போதே கேட்டும் அனுப்பவில்லை. கணக்கைக் கேட்டு வாங்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டதால் கேட்டேன் கணக்குத்தரவில்லை. இன்றுவரைக்கும் (7 – 10 – 58) தரவில்லை. அண்ணாத்துரை தரவில்லை. கணக்குத் தரக்கூடாது என்பதற்காகத் தரவில்லை அண்ணாத்துரை!

அதன் தகவல் என்ன?

பாரதிதாசனை ஆசிரியராகக்கொண்டு குயில் கவிதை வார இதழ் வெளிவரும் என்ற மறைவான சுற்றறிக்கை பறந்தது. விற்பனையாளரை நோக்கி! ஆறாயிரம் ரூபாய் குயிலுக்கு முற்பணமாக அனுப்பியிருக்கிறார்கள் விற்பனையாளர்கள்.

என்னிடம் T. N. இராமன் வந்து குயிலில் வெளிவர வேண்டிய கவிதைகளை யெல்லாம் வாங்கிக் கொண்டு, என் அச்சு நிலையத்தையும் சென்னையிலிருக்கட்டும்என்று தூக்கிக்கொண்டு போய் விட்டார். அப்போது அவர் சொன்னது என்னவென்றால் குயில் பற்றி நீங்கள் சென்னைக்கு வரவேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்ளுகின்றோம் என்பது.

சில நாட்களின்பின், குயில் வெளிவரு நாள் ஆயிற்றே. அது பிழையில்லாமல் வெளிவர வேண்டுமே என்று கருதிச்சென்னைசென்றேன்.

திருத்தம் பார்க்க முதற்குயில் எனக்கு அனுப்பப்படுகிறது. அதன் முதற்பக்கத்தில் குயிலுக்கு உடையவர் T. N. இராமன் என்று காணப்படுகின்றது. அவர்களின் உள் எண்ணத்தைஅறிந்தேன். அவர்களே சொன்னார்கள்: குயில் உம்முடையது அன்று. அச்சகம்

சங்கொலி மதிப்புரை

சங்கொலி என்ற தமிழ்இதழ் வாழ்க!
திங்கள் இருமுறை செவ்வனம் வெளிவரும்
தனிஇதழ் தன்விலை எட்டுக் காசே
அதற்குச் சாக்கியன் ஆசிரியர்எனில்
மதிக்கப் பெறும்என வரைய வேண்டா
அன்றியும் இந்நாள் அடையத் தகுவது
நாட்டின் விடுதலை என்று நவிலும்
திராவிடர் கொள்கையைத் தாங்கித் திகழ்வேன்
என்று சங்கொலி இயம்புதல் காண்க.
இதழுக் குடையார் கொள்கை இதுவெனில்,
மகிழ்ச்சிக் குரியது மற்று முண்டோ.
சங்கொலித் தமிழ்நடை நன்று!
இங்கது பெரும்புகழ் எய்துக இனிதே!

பாரதிதாசன்

சங்கொலி கிடைக்குமிடம்:

33, வி. எஸ். வி. கோயில் தெரு,
சென்னை 4.

உம்முடையது அன்று. குயில் எழுதுவதற்குத் திங்கள் ஊதியமாக 200 ரூபாய் உமக்குக் கொடுக்கப்படும், என்று கூறப்பட்டது. அதனோடு, நீர் எம்மை ஒன்றுமே செய்ய முடியாது என்றும் கூறப்பட்டது.

நான் என்ன செய்தேன்?

நான், அந்தக் குயிலுக்கும் எனக்கும் யாதொரு தொடர்புமில்லை. விற்பனையாளரிடம் வாங்கியுள்ள முற்பணத்திற்கு நான் பொறுப்பாளி அல்லேன். இனி நான் என்வாயிலாக வெளியிட இருக்கும் குயிலுக்கு ஆதரவு தருக என்று நாளிதழ் ஒன்றில் அறிக்கை வெளியிட்டு, என் குயிலையும் வெளியிட இருக்கையில் அதன்மேல் இஞ்செக்ஷன் உத்தரவுகோரி ஐகோர்ட்டில்என் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நானும் வழக்கறிஞரை வைத்து எதிர் வழக்கிட்டேன்.

(தொடரும்)

நச்சினர்க்கு நஞ்சா? அமிழ்தா? (3)

—கயல்விழி—

இற்றைக்கு ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர்– ஒருநாள், தமிழ் தவழ்ந்த மதுரைமா நகரத்து வீதியெங்கணும் தோரணங்கள் தொங்கி மங்கல நிகழ்ச்சியை மாநிலத்தோர்க்கு எடுத்தோதி நின்றன, சாணமிட்டுத் தெளித்துக் கூட்டிய வாசலின் முன்பு எழில் பொங்கி நிற்கும் மங்கையரின் கைவண்ணத்தின்வழி முகிழ்த்துக்காந்தள் விரல்வழி இறங்கிய மாக்கோலம் அவ்வாசலுக்கு மேலும் அழகு பெருக்கி எழில் கூட்டி நின்றது.

பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துப் போரில் அடியொதுங்கிப் பிற்பெயராப் படையோர்க்குத் தகுதியறிந்து பரிசுநல்கும் பெருவிழா. வெற்றிவிழா.

குளிர்பூந் தென்றல் தவழும் பொதியையில் பிறந்த சந்தனத்தைப் பரந்த மார்பிலே பூசி, பசுமை வளஞ் செறிந்த வையைக் கரையில் மலர்ந்த மல்லிகையும், முல்லையும், இருவாட்சியும், இன்ன பிறவற்றையும் விரவித் தொடுத்த வண்ண மலர்மாலை கழுத்திலே தாழ, வீர வளையும், மணி பதித்த மோதிரமும் விளங்கி நிற்ப, கஞ்சியிட்டுத் தேய்த்த உடை சலசல என்ற ஒலியை எழுப்ப, சிற்பத்துறையில் கற்றுத் துறைபோய வல்லவன் ஒருவன் வகுத்த அழகுபொருந்திய சிற்பத்தைப் போல அழகு மிளிர, அரிமா நோக்குடன், ஏற்றமுடன் இனிது நடந்து, அரசவை அண்மினன் – பாண்டியன் நெடுஞ்செழியன்.

இனி வெற்றி விழா தொடர்ந்து அரசன் முன்னிலையில் நடைபெறட்டும், நாம் அரசனைப் பற்றிய சிறு ஆய்வில் இறங்குவோம்.

தனது சொற்கோவை மூலம் அரசனை இவ்வளவு ஒப்பனை செய்து காட்டிய மருதனார், நெடிதுயர்ந்த அவனது உருவின் திருவை, அழகெலாம் ஒருங்கு திரண்டு, ஒவ்வொரு கோணத்திலும் குடிகொண்டு, எழில் தவழ்ந்து நிற்கும் சிற்பத்திற்கு ஒப்புக் கூறுகிறார்.

"வல்லோன் தைஇய வரிப்புனைப் பாவை
முருகு இயன்றன்றன உருவினை ஆகி"

—மதுரைக்காஞ்சி (724–25)

முருகு என்னும் வளஞ் செறிந்த பழந்தமிழ்ச் சொல்லுக்கு இளமை, மணம், அழகு, கடவுட்டன்மை என்ற நான்கு பொருள்களுண்டு, ஈண்டு ஒரு சிற்பத்தைக் கூறி "அச்சிற்பத்தில் முருகு (அழகு) பெருகி முகிழ்த்து நிற்றல் போல" என்கிறார், ஆகவே இவ்விடத்தில் அழகு என்று பொருள் கொள்ளுதலே சாலும், சிற்பத்துறையில் கற்றுத் துறை போய வல்லுநன் விழைந்து வடித்தெடுத்த பாவையில் (சிற்பத்தில்) எழில் பெருகி நிற்றல் தானே ஏற்புடைத்து.

பாவையை அரசனுக்கு ஒப்புக்கூறி இருக்கிறாரே. அவ்வாறாயின் அது எவ்வாறு தம்முள் பொருந்தும் என்பதைக் காண, சிற்பத்திற்கும் முருகிற்கும் (அழகிற்கும்) உள்ள இயைபையும், அரசனுக்கும் அரச பதவிக்கும் உள்ள தொடர்பையும் விளங்கக் கண்டு, பின்னர் அவை இரண்டையும் பொருத்திக் காணுவோமாயின் உண்மைப் பொருள் தெற்றென விளங்கும்.

இயற்கை வடிவங்கள் புலன்கள் வழி, உள்ளத்தில் நுழைந்து சிற்பியின் கைவழி இறங்கி உருக்கொள்ளும் பொழுது வெறும் பிண்டப்பொருள்களாகிய கல்லும், மரமும், பளிங்கும் மறைந்து அழகு முகிழ்க்கிறதல்லவா?

அந்த அழகாகிய முருகு தன் தகவுக்கேற்ப, சிற்பியால் இயற்றி அழகு செய்யப்பட்ட வடிவத்தே நின்று மன்னுயிர்களது உள்ளம் மகிழுமாறு காட்சி இன்பம் அளித்து உயிரை ஓம்புகிறது. அந்தச் சிற்பம் அழிந்து பட்டதாயின் அதனுள் குடிகொண்டிருந்த அழகும் அச்சிற்பத்துடன் தானும் அழிந்தா போகும்? அழியாது. அந்த அழகு இன்னொரு சிற்பத்தில் தன்னை நிறுத்தியோ, அல்லது வேறு முறையிலோ அழகாக, முருகாகக் காட்சி நல்கும், ஆக, அந்த முருகு அச் சிற்பமேதான் தனக்குப் பற்றுக்கோடு என்று அங்கு உறைகிறது. அல்ல. பின் எதற்காக? அச்சிற்பத்தின் வழி நின்று அழகைப் புலப் படுத்தினால் தனக்குப் பெருமை, புகழ் என்று நினைத்தா அந்த அழகு அங்கு ஒன்றிநிற்கிறது. அதுவும் அல்ல, முருகானது மக்களது காட்சி இன்பத்திற்காகத்தான் அச் சிற்பத்துடன் ஒன்றிநிற்பதே தவிர தனக்காக அச்சிற்பத்தில் குடிகொள்ளவில்லை.

இனி அரசன் பூசுவன பூசி, அணிவன அணிந்து, உடுத்துவன உடுத்துத் தன்னிடத்தே முருகு (அழகு) மிளிர இருக்கிறான். இவ்வாறு ஒப்பனைசெய்து செல்லுகின்றஉடல், என்றாவது அழிதல்

திண்ணம். ஆனல் அந்த அழிவு நேருங்காலம் வரையிலும் உடலிற் பற்றின்றி, புனைந்துபோற்றி ஒப்பனை செய்து ஓம்பவேண்டும். முதலில் பற்றின்றி எனக் கூறிவிட்டுப்பின்னர் புனைந்துபோற்றி ஒப்பனை செய்வது எற்றுக்கோ வெனில் அது பிறர் நலத்தின் பொருட்டு எனக்கொள்க.

பிறர் நலத்துக் கெனில் எங்கனம் அது பொருந் தும் என்னும் வினு எழலாம், வான் நோக்கிவாழும் குடியெலாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் தன்மையது. அவ்வாறு தன்னையே நம்பிவாழுகின்ற குடிமக்களது வாழ்வு சிறக்க, மேம்பட, பொலிவுற் றுத் திகழ அவர்களை ஓம்பிக் காத்துத் தனது கட மையினைச் செவ்வனே ஆற்றுதல்வேண்டும். அவ் வாறு கடனுற்றும் மன்னவன் தன் தகவுக்கேற்பப் பூசுவன பூசி, பூண்பன பூண்டு, உடுத்துவன உடுத்து ஊக்கமுடன் அரசவை நண்ணுதல் வேண் டும். ஆகவே மாநில மன்னவன் பாண்டியன் தனக் காகப் பூசி, பூண்டு, உடுத்தவில்லை என்பதை இங்கு வலியுறுத்தி மேற் செல்வோம்.

சிற்பத்தின் வழி முருகு தன்னை நிறுத்திக் காட்டு தலையும், அரசபதவி வழி நெடுஞ் செழியன் தன்னை நிறுத்திக் காட்டுதலையும் கண்டோம். இனி இவை இரண்டும் எவ்வாறு தம்முள் ஒக்கும் என்பதையும் காண்போம்,

அழகாகிய முருகு தன் தகவுக்கேற்ப, சிற்பி யால் இயற்றி அழகு செய்யப்பட்ட வடிவத்துள் நின்று மன்னுயிர்க்குக் காட்சி இன்பம் அளித்து உயிரை ஓம்புவதுபோல, நன்றும் தீதும்கண்டாய்ந்து அடக்கி, அன்பும் அறனும் ஒழியாது காத்துக் கோலோச்சும் நெடுஞ்செழியன், பதவியின் தகவுக் கேற்ப முருகு (அழகு) மிளிர இருந்து குடிகளை ஓம்பினுன் எனக் கொள்க

முருகாகிய அழகு சிற்பத்தில் சிறந்து தவழ்ந்து எழில் பெருக்கி நிற்பது தனது சொந்தப் பயன் கருதியா? அல்ல. மன்னுயிரின் பொருட்டு. அது போல அரசன் என்னும் பதவியைத்தான் மேற் கொண்டுள்ளது தனது சொந்தப் பயன் கருதியா? அன்றிப் புகழ் கருதியா? தன் கடமையாகிய அரசி யலை மக்களின் நல்வாழ்வுக்காகத் தான் தாங்கி நிற் கிறுன் என முடிக்க.

இனி, சிற்பம் அழிந்துபடும் பொழுது அதனுள் ஏறியிருந்த முருகு அதனை விட்டு நீங்கி வேறிடத் தில் குடி கொள்ளுகிறது என்று முன்னர்க் கூறினேன். அழியாத ஒன்றுதான் அழகாகும். தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களும், ''தோற்ற ஒடுக்க மில்லா ஒன்றே அழகாகும்'' என்று கூறியுள்ளார். இது எங்கனம் பொருந்தும் எனக் காண்போம்.

காலையிளம் பரிதியில் முருகைக் காணலாம். கடற்பரப்பில் ஒளிப்புனலில் காணலாம். அந்திவான் செக்கரிடத்துக் காணலாம்; பனிப் புல்லில், பெண் மையில், பொழிலில் முருகைக் காணலாம், அந்த முருகு இடம் விட்டு இடம்தாவி மற்றையதில் குடி கொள்ளும் தன்மையது.

அந்திவானிலே முருகைக் காண்கிறோம், அது மறைந்து காலையிளம் பரிதி வழியாகக் காட்சி நல்கு கிறது, அருவியின் வீழ்விலே, ஆற்றின்ஓட்டத் திலே, தண்பூம் பொழிலிலே, பெண்ணின் மேனி யிலே அது உறைகிறது, பொழிலும் பெண்ணும் அழிந்து பட்டனவாயின் அழகே அழிந்துபட்டது என்ருபொருள்? அது எத்தனையோ முறையிலே என்னென்ன வண்ணமாகவோ காட்சிஅளிக்கிறது, ஆக, அழகுதோற்ற ஒடுக்கமுடைய ஒரு பொரு ளல்ல என்பதை நிலை நிறுத்தி மேற்செல்வோம்,

முருகின் பல கூறுகளில் ஒன்ருகிய சிற்பத்தின் வழித் தன்னைப் புலப்படுத்திய முருகு, அச் சிற்பம் அழிந்தவழி, தான் வேருெரு சிற்பத்தின் வாயிலா கவோ, அன்றித்தான் எங்கு அழகாகக் காட்சி அளிக்க விழைகிறதோ, அங்கு உறைகிறது,

அரச பதவி என்பது யாராவது ஒருவன் வழிச் செயல்பட்டு நிற்க வேண்டிய ஒன்று. ஈண்டுப் பாண் டியன் நெடுஞ்செழியன் வழித் தன் வினையை ஆற்று கின்றது. பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்து படுகின்ற பொழுது அவனுடன் இவ்வரச பதவியா கிய தானும் சேர்ந்தா இறந்துவிடுகிறது. அல்ல. அவன் வழிச் செயல்பட்டு நின்ற அரசபதவி இது பொழுது அவன் மகன் வாயிலாகவோ அன்றிப் பிறிதொருவன் வாயிலாகவோ செயல்பட்டு நிற்கும்.

முருகு எவ்வாறு சிற்பத்தின் வழி இறங்கி அதன்கண், பற்றின்றி இருந்து, அச்சிற்பம் அழி கின்ற வழித்தான் வேறிடத்தில் குடி கொள்கிறதோ அதுபோல இப்பாண்டியன் நெடுஞ்செழியன் வழி வினையாற்றுகின்ற அரசபதவி அவன் இறந்துபட்ட காலத்தோடு தான் அழிந்து படாமல் பிறிதொருவன் வாயிலாகச் செயல்படும்.

இவற்றிலிருந்து முருகும் சிற்பமும் ஆகியஇரு வேறுபட்ட கூறுகள் ஒன்று சேர்ந்து நின்று, பின் சிற்பம் அழிகின்றவழி வேருகப் பிரிகின்றனவோ, அதுபோன்று, அரசபதவி அதை ஏற்றுச் செயல். படுத்துபவன் என்கின்ற இரு வேறுபட்டகூறும்

என்று பட்டுப் பின்னர் வேறுபடும் விந்தையைக் காண்கின்றோம்.

உடலின் ஒடுக்க நிலை உணர்ந்தும், அதன்கண் பற்றின்றிப் போற்றி மகிழும் தன்மைகூறுதல் மூலம் மருதனாரது காஞ்சிகூறும் வன்மையையும் பெரும் பொருளை ஈரடிகளில் எடுத்திக் காட்டிய திறனையும் எச் சொற்களால் எடுத்துத் தொடுத்துப் புகழுதல் சாலும்?

இவ்வளவு அகன்ற பொருளைச் சுருக்கி முடக்கி நுண்ணிதாக ஈரடிகளுக்குள் நுழைத்துத் தந்த மருதனாரின் உள்ளத்தை எடுத்துக் காட்ட மாட்டாத நச்சினார்க்கினியர் நாட் காலையில் அரசர்க்குரிய கடன்கள் கழித்துத் தெய்வ வழிபாட்டோடு இருந்தமை கூறினர்'' என்று உரை கூறுகிறார்.

பாவைக்கு அரசனை ஒப்பிட்டது தெய்வ வழிபாட்டோடு இருந்தமைக்கா? அன்றி மேலே நாம் கண்ட காரணங்களுக்காகவா?

எனவே அஞ்சி, நடுங்கி, வெறுத்து, ஒதுங்கி நஞ்சைத்தள்ளுக, நாடித் தேடி நல்லமிழ்தம் கண்டு உண்க.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

—குறள்

குறிப்பு:-

திரு, பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள், மேற்கண்ட இரண்டு அடிகட்கும் எழுதிய அகலவுரையின் துணைகொண்டு இக்கட்டுரை வரையப்பட்டது.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து) காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

இந்தி பேசினால் !!

[புலவர் "மதி" திண்டிவனம்]

நல்லறி வோரே! நற்றமி ழோரே!
எள்ளுதல் செய்யீர் என்பெய ரிந்தி
சொல்லுதல் கேளீர்! சூழ்ச்சிதான் பாரீர்!
செந்தமி ழன்னையின் சீரெனக் கில்லை
சிந்தனை நூலெனும் சேயெனக் கில்லை
இலக்கண மென்றிடும் எழிலெனக் கில்லை
இலக்கிய மென்றுரை வளமெனக் கில்லை
உலகுடன் தோன்றிய உயர்வெனக் கில்லை
என்பிறப் பையோ என்னெனச் சொல்வேன்
புன்பிறப் பென்றே புகலுவர் சான்றோர்!
வையகம் போற்றிடு வள்ளுவம் ஈந்த
மெய்ப்புகழ் சிலம்பொடு மேகலை தந்த
பைந்தமி ழன்னையைப் பாவியர் மாய்க்க
இந்தியா மென்னையே எய்கிரு ரம்பென,
தில்லியி லுள்ளவர் தென்னவர் தங்களைப்
புல்லினும் புன்மையாய் உள்ளுவர்; ஆதலின்
என்றனைக் கற்றவர் ஏற்றவர் பணிக்கெனப்
பன்னுவர்; செந்தமிழ்ப் பிள்ளைகாள் நீவிர்,
மொழியுணர் வழித்திடின் மூண்டிடும் அடிமை
வழியிதை உணர்ந்தவர் வடவரும் ஆவார்,
என்னையுட் புகுத்துதல் எதிர்த்திடு வீரே
கொன்றுமே போடினும் கொள்கையைக் [காப்பீர்.
இந்தியா மென்னையே உம்தலை மீது
ஏற்றிட எண்ணுவார் இடறியும் ஓடிடக்
குட்டுவன் கூட்டமே கொட்டிடு முரசே!
இராவண னென்றுமே எம்மவர் கூறும்
இராமசா மியெனும் உம்முடைப் பெரியார்
வழியினிற் சென்றிடு வாழ்வினி லுயர்ந்திடு.
இழிநிலை சென்றிட ஏறென எழுந்திடு.
என்பிழை ஈதில் எள்ளள வில்லை
சின்னவர் வடவர் செய்பிழை ஈதே
நானுமை வெல்ல நத்திய தில்லை
என்சொலை நம்பிட எண்ணமே இலையோ?
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் [அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவென
சொல்லிய வள்ளுவர் சொல்லுணர் வீரே!

குயில்

Regd. No. M. 7030.

திரு, முத்தமிழ் அழிக்கும் சட்டர்சிக்குக் கரு முத்துக் கேடயம் கொடுத்தார்

திருமுத் தமிழ்வெட்டத் தென்னுடுபோந்த சட்டர்சிக்குக்
கருமுத் தளித்தனன் கைக்கேடயம்நெடுங் கல்கத்தாவில்
தருமத்தைக் கொன்றும் தமிழ்த்தாயைக் கொன்றும் தனையுயர்த்தும்
கருமத்தைச் செய்பவன் கைகாரனேனும் சுயவனன்றே.

டாக்டர் சுனிதி குமார் சட்டர்சி என்பவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கூட்டியுள்ள திராவிட மொழியாராச்சிக் குழுவின் தலைவர். இவர் தமிழை ஒழிக்க எடுத்துவரும் முயற்சியைக் **குயில்** தன் தலையங்க வாயிலாகப் பன் முறை விளக்கியுள்ளது இந்த, சட்டர்சிக்கு, 2-10-58 பார்ப்பனரால் கல்கத்தாவில் நடைபெறும் தமிழ் எழுத் தாளர் கழக ஆண்டு விழாவின் போது கருமுத்துத் தியாகராசர் வெள்ளிக் கேடயம் அனுப்பியுள்ளார் என்பது யாவரும் அறிந்ததே.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன், புதுச்சேரி.**
அச்சிடுவோர்: **மா. தண்டபாணி.** பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.